**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 136/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **அ.சா.1** |
| Name | : | **திருமதி. வனிதா** |
| **Father's Name** | | **திரு. சின்னசாமி** |
| Village | : | குரும்பலூர் |
| Taluk | : | **பெரம்பலூர்** |
| Age | : | 27/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.09.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 ஆஜர், எதிரி 2 ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். 1வது எதிரி வேல்முருகன் எனது கணவர். 2–வது எதிரி வள்ளியம்மை எனது மாமியார். எனக்கும், என் கணவருக்கும் திருமணமாகி 5 வருடங்கள் ஆகிறது. திருமணம் முடிந்து அன்னமங்களத்தில் உள்ள என் கணவர் வீட்டில் கூட்டுக்குடித்தனமாக குடும்பம் நடத்தி வந்தோம். அவ்வாறு கூட்டுக்குடும்பமாக இருந்தபோது, எனக்கும், என் கணவருக்கும், என் மாமியாருக்குமிடையே சிறு கருத்து வேறுபாடு இருந்து வந்தது. நான் புகார் கொடுத்து சம்பவம் நடந்து சுமார் 5 வருடங்கள் இருக்கும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு சின்ன ஒரு கருத்து வேறுபாடு காரணமாக தான் நான் போலிசில் புகார் கொடுத்தேன். மேற்படி கருத்து வேறுபாடு காரணமாக என் கணவர் என்னை தாக்கவில்லை. என்னை என் கணவர் மிரட்டவில்லை. என் மாமியார் என்னை மிரட்டவில்லை. நான் தானாகவே வந்து பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். பெரம்பலூர்

அரசு மருத்துவமனையிலிருந்த போது போலிசார் என்னை விசாரித்தனர். போலிசாரிடம் வாக்குமூலம் ஏதும் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது நான், எனது கணவர், எனது மாமியாருடன் சமாதானம் ஆகிவிட்டேன். சமாதானம் மனுவில் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன். போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 14.06.2021 அன்று நான் என் கணவரை காதலித்து திருமணம் செய்து கொண்டேன் என்றும், அன்னமங்களத்தில் உள்ள என் கணவரது வீட்டில் எனது மாமியாருடன் கூட்டுக்குடும்பம் நடத்தி வந்தேன் என்றும், என் கணவர் மாமியாரின் பேச்சைக் கேட்டு, என்னை அடிக்க ஆரம்பித்தார் என்றும், எனது கணவரும், எனது மாமியாரும் என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்றும், தகாத வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், கடந்த 16.07.2021 அன்று இரவு சுமார் 9 மணியளவில், என் கணவர் என்னை வீட்டில் வைத்துக் கொள்ள முடியாது என்றும், வீட்டை விட்டு வெளியே போ என்று, கழுத்தை பிடித்து வெளியே தள்ளினார் என்றும், வீட்டிலிருந்த ரீப்பர் கட்டையால் எனது இடது தொடையின் மீது அடி அடி என்று அடித்தார் என்றும், கொலை செய்து விடுவதாக மிரட்டினார் என்றும், எனது மாமியார் அவளை அடித்து காலி பண்ணுடா என்றும், இவளுக்கு யார் இருக்கிறார்கள் கேட்க என்று சொல்லி, என் கணவரை தூண்டிவிட்டார் என்றும், எனது கணவரும், எனது மாமியாரும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருந்து வாங்கி தராமலும், சாப்பாடு போடாமலும், என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்றும், நான் எனது பெரியம்மா பட்டு என்பவரின் உதவியோடும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றும், சிகிச்சையிலிருந்த போது சம்பவம் குறித்து போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும், அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. தற்போது என் கணவர் மற்றும் மாமியாருடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களை

வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.